# FIRST INFORMATION REPORT

## முதல் தகவல் அறிக்கை

u/s.173 BNSS ~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

C 8069098

1\. District மாவட்டம் : சிவகங்கை PS: காவல்நிலையம்: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு Year: ஆண்டு: 2024 FIR No. மு.த.அ. எண்: 3/2024 Date: நாள்: 08/07/2024

2\. (i) Act சட்டம்: Prevention of Corruption Act Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: 1988, as amended by the P.C. Sections பிரிவுகள்: 7

(iii) Act சட்டம்: (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3\. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் : 03.07.2024 Date to நாள் வரை : 08.07.2024

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 08.07.2024 Time நேரம் : 16.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol-III Time நேரம் : 16.30 hrs

4\. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5\. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 75 Km வடகிழக்கு

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி மின்பொறியாளர் அலுவலகம், TANGEDCO, மணக்குடி, சிவகங்கை மாவட்டம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6\. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.மு.சந்திரன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் முத்து

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 49/2024 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் – பில்டிங் கான்ட்ராக்டர் (g) Address : முகவரி க.எண். 32A, வடக்குத் தெரு, நடராஜபுரம், புதுவயல், காரைக்குடி வட்டம், சிவகங்கை மாவட்டம்.

7\. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திருமதி. ரேவதி, உதவி மின்பொறியாளர், TANGEDCO, மணக்குடி, சிவகங்கை மாவட்டம்

8\. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

– No delay.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 08.07.2024 தேதி 16.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது, சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், புதுவயல், நடராஜபுரம், வடக்குத்தெரு, க.எண்.32A முகவரியுடைய முத்து மகன் திரு.சந்திரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துபூர்வமான புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சுமத்தப்பட்ட மணக்குடி உதவி மின் பொறியாளர் திரு.ரேவதி பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும் புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தெற்கு சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசி வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 08.07.2024-ம் தேதி 16.30 மணிக்கு சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.3/2024 u/s 7 of Prevention of Corruption Act 1988, as amended by

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M.சந்திரன்

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
08.07.2024 at 17.30 hrs

Name: பெயர் ஆ.ஜான் பிரிட்டோ
Rank: நிலை ....................No. எண் ..........
காவல் துணைக்கண்காணிப்பாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
சிவகங்கை

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

the P.C.(Amendment) Act 2018 என வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு, அனுப்புநர் மு.சந்திரன், த/பெ.முத்து, க.எண்.32A, வடக்குத்தெரு, நடராஜபுரம், புதுவயல், காரைக்குடி வட்டம், சிவகங்கை மாவட்டம். பெறுநர் காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சிவகங்கை. ஐயா, நான் மேற்கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் கடந்த 30 வருடங்களாக பில்டிங் கான்ட்ராக்ட் வேலை செய்து வருகிறேன். எனது மனைவி திருமதி. ஆராயி புதுவயல் 1வது வார்டு கவுன்சிலர் ஆவார். எங்கள் ஊரில் நடராஜபுரம் தெருவில் பழனி கொத்தனார் வீட்டிற்கு அருகே உள்ள EB Pole, சின்னையா கோனார் வீட்டு சந்தில் உள்ள மற்றொரு EB Pole ஆகியவை மிகவும் பழுதடைந்து உள்ளதால், அந்த 2 மின் கம்பங்களையும் மாற்றி புதிய மின்கம்பங்கள் அமைக்கக்கோரி, சுமார் 2 மாதங்களுக்கு முன் மணக்குடி, உதவி மின் பொறியாளர் அலுவலகத்தில் மனு கொடுத்தேன். அந்த மனுவின் பேரில் சுமார் 1 மாதத்திற்கு முன்னர் மணக்குடி AE திருமதி.ரேவதி அவர்கள் எங்களது தெருவிற்கு நேரடியாக வந்து பார்வையிட்டு, 2 மின் கம்பங்களையும் விரைவில் மாற்றித்தருவதாக தெரிவித்தார். அதன்பின்னர் மின் கம்பங்கள் மாற்றப்படாமல் இருந்து வந்ததனால், கடந்த 03.07.2024ம் தேதி மாலை சுமார் 5 மணியளவில், எனது அலைபேசி எண்.9750097935-லிருந்து AE திருமதி.ரேவதி அவர்களை அவரது அலைபேசி எண்.9445853091-ல் தொடர்புகொண்டு மின்கம்பங்கள் எப்போது மாற்றுவீங்க என கேட்டதற்கு, அவர் என்னிடம், 2 மின் கம்பங்களையும் மாற்றுவதற்கு ரூ.3000/- செலவாகும் என்று கூறினார். நான் அதற்கு அவ்வளவு செலவாகுமா? மேடம், பார்த்து செய்யுங்க என்று சொன்னேன். அவர் இதுல குறைக்க முடியாது என்று சொல்லிவிட்டார். அதன்பின்னர் இன்று 08.07.2024ம் தேதி காலை சுமார் 12 மணியளவில் மணக்குடி உதவி மின் பொறியாளர் அலுவலகத்திற்கு சென்ற போது, அவர் வெளியில் கிளம்பி கொண்டிருந்தார். என்னை பார்த்தவுடன் போனில் பேசுமாறு சைகை காண்பித்துவிட்டு சென்றுவிட்டார். அதனைத்தொடர்ந்து நான் எனது அலைபேசி எண்ணிலிருந்து, AE திருமதி. ரேவதி அவர்களின் அலைபேசியில் மதியம் சுமார் 1 மணியளவில் தொடர்புகொண்டு பேசியபோது, மின் கம்பங்களை நாளை மாற்றிவிடலாம், நீங்கள் நாளைக்கு காலையில் ஆபிசுக்கு வந்து, ரூ.3000/- கொடுங்க என்று கேட்டார்.

நான் அவரிடம், நாளைக்கு காலைல வந்து பார்க்கிறேன் என்று சொன்னேன். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லை. எங்கள் தெருவில் பழுதடைந்த மின் கம்பங்களை மாற்றுவதற்கு என்னிடம் ரூ.3000/- லஞ்சம் கேட்ட மணக்குடி AE திருமதி. ரேவதி மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு ஒப்பம் மு.சந்திரன், 08.07.2024.

Sir, Received the complaint on 08.07.2024 at 16.00 hrs and genuineness of the complainant was verified through sources and found to be genuine. The Integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Found prima facie for the allegation of the complainant. Since, the registration of Regular Case is warranted, the matter is intimated to the SP/SR, V&AC, Chennai, obtained permission from the SP/SR, V&AC, Chennai and registered a case in Sivagangai V&AC Crime.No.3/2024 u/s 7 of Prevention of Corruption Act, 1988, as amended by the P.C.(Amendment) Act 2018 on 08.07.2024 at 16.30 hrs and took up for investigation. sd.A.John Britto, Dy. Superintendent of Police, V&AC, Sivagangai.

இந்த வழக்கின் அசல் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், சிவகங்கை அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கிறேன்.

DEPUTY SUPERINTENDENT OF POLICE,
VIGILANCE AND ANTI-CORRUPTION,
SIVAGANGAI.